கத்தியை காட்டி மிரட்டி பணம் பறித்த பழைய குற்றவாளி கைது

சூலூர், நவ.22: கோவை மாவட்டம் சூலூர் அருகே உள்ள படகுத்துறை பகுதியில் பொதுமக்களிடம் கத்தியை காட்டி பணம் பறித்த பழைய குற்றவாளியை போலீசார் கைது செய்தனர்.

சூலூர் காங்கேயம் பாளையம் பகுதியை சேர்ந்தவர் மணிகண்டன் மகன் குணசேகரன் (22). இவர் நேற்று மதியம் படகுத்துறை பகுதியில் உள்ள பூங்கா அருகே தனியாக அமர்ந்திருந்துள்ளார். அப்போது அங்கு வந்த ஒரு நபர் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி பாக்கெட்டில் இருக்கும் பணத்தை கொடுத்து விடு இல்லை என்றால் குத்தி கொலை செய்து விடுவேன் என மிரட்டி உள்ளார். திடீரென குணசேகரன் பாக்கெட்டில் இருந்து 1,500 ரூபாயை அந்த நபர் பறித்து கொண்டார். பயந்து போன குணசேகரன் அங்கிருந்து தப்பித்து சூலூர் காவல் நிலையம் வந்து புகார் அளித்தார். உடனடியாக போலீசார் அந்த பகுதிக்கு சென்று சோதனை நடத்திய போது மேலும் சிலரிடம் இதே போல் மிரட்டிக் கொண்டிருந்த வாலிபர் ஒருவரை பிடித்து காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தினர்.

இதில் அவர் சூலூர் மதியழகன் நகரை சேர்ந்த கௌதம் பிரகாஷ் (21) என்பதும் இவர் மீது ஏற்கனவே கொலை மற்றும் கொலை முயற்சி, அடிதடி வழக்குகள் சூலூர் காவல் நிலையத்தில் இருப்பது தெரிய நந்தது. மீண்டும் தற்போது கத்தியை காட்டி பணம் பறித்த வழக்கில் அவர் மீது வழக்குப்பதிவு செய்த போலீசார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

அமேசான் உடன் இணைந்தது மச்செனிகே இந்தியா

கோவை, நவ. 22: நாடு முழுவதும் வளர்ந்து வரும் கேமிங் கலாசாரத்தில் ஏற்பட்டுள்ள இடைவெளியை கருத்தில் கொண்டு அதைப் போக்கும் விதமாக புதிய கேமில் தங்கள் விற்பனையை அமேசான் மூலம் மச்செனிகே இந்தியா தொடங்கியது.

அன்றாடம் விளையாடுபவர்கள் நம்பகமான, அதே சமயம் குறைந்த விலையில் கேமிங் சாதனங்களை கண்டுபிடிக்க சிரமப்படுவதைக் கண்டறிந்த, நெல்லையை சேர்ந்த வெங்கடலட்சுமி அந்தப் பிரச்னையை தீர்க்க மச்செனிகே இந்தியா என்ற நிறுவனத்தை துவக்கினார்.

கம்பியூட்டர் கேமிங்கை அனைத்து தரப்பு மக்களும் விளையாடக்கூடிய ஒன்றாக மாற்றுவதற்காக மச்செனிகே இந்தியா உருவாக்கப்பட்டது. வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் உயர்தர கேமிங் மவுஸ், வயர்லெஸ் கண்ட்ரோலர்கள் மற்றும் கேம் பேட்கள் அறிமுகம் செய்யப்பட்டது. இந்தியாவில் அதிகரித்து வரும் கேமிங் கலாசாரத்தை ஆதரிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் எளிய முறையில் துவக்கப்பட்ட இந்நிறுவனத்தின் பயணம் தற்போது விரிவடைந்துள்ளது.

இதுகுறித்து அமேசான் இந்தியா விற்பனை இயக்குனர் கவுரவ் பட்தாகர் கூறியதாவது:

நாடு முழுவதும் அனைத்து பகுதிகளிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவை அளிக்க 17 லட்சம் விற்பனையாளர்களுக்கு அமேசான் சிறப்பான பாதையை அமைத்துக் கொடுத்துள்ளது.

சஹேலி மற்றும் கரிகர் திட்டங்கள் மூலம் 18 லட்சத்திற்கும் அதிகமான பெண் தொழில்முனைவோர், நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியாக மாற்றி உள்ளோம். டிஜிட்டல் சந்தைகள் மூலம் பெண்கள் தலைமையிலான வணிக நிறுவனங்கள் எவ்வாறு வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதை பெண்கள் தொழில்முனைவோர் தினம் காட்டுகிறது. அதற்கு உதாரணமாக மச்செனிகே இந்தியா உள்ளது. அமேசானில் இணைந்ததிலிருந்து, மச்செனிகே இந்தியா சிறப்பான வளர்ச்சி அடைந்து வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

எஸ்.ஐ.ஆர் குறித்து சந்தேகங்களுக்கு தீர்வு காண நடவடிக்கை: கலெக்டர் பேட்டி

கோவை, நவ.22: இந்திய தேர்தல் ஆணையத்தின் சார்பில் எஸ்.ஐ.ஆர். எனப்படும் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணிகள் தமிழ்நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கோலங்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. அரசு ஊழியர்கள் விழிப்புணர்வு வாசகங்களுடன் வரைந்த கோலங்களை கலெக்டர் பார்வையிட்டார். பின்னர், அவர் கூறுகையில்: "இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது குறித்து கோவை மாவட்ட மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக கோலங்கள் வரையப்பட்டுள்ளன. மாவட்டம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. எஸ்.ஐ.ஆர். குறித்து பொதுமக்களுக்கும், வாக்காளர்களுக்கும் என்ன சந்தேகம் இருந்தாலும் 1950 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். அனைத்து வாக்குச்சாவடிகளிலும் உதவி மையங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்றார்.

ஆர்த்தோ ஒன் கூடைப்பந்து போட்டி

24ம் தேதி முதல் 30ம் தேதி வரை நடக்கிறது

கோவை, நவ. 22: நாட்டின் முன்னணி எலும்பியல் நிறுவனங்களில் ஒன்றான ஆர்த்தோ ஒன் ஆர்த்தோபெடிக் ஸ்பெஷலிட்டி சென்டர் ஆர்தோ ஒன் கூடைப்பந்து போட்டியை அறிவித்துள்ளது.

இந்த போட்டி நவம்பர் 24ம் தேதி முதல் 30ம் தேதி வரை மாநகராட்சி கூடைப்பந்து போட்டி மைதானத்தில் நடைபெற உள்ளது.

இதில் கோவை மற்றும் அதன் சுற்றுவட்டார மாவட்டங்களிலுள்ள பள்ளிகள் மற்றும் கிளப்புகள் பங்கேற்க உள்ளன. 14 வயதிற்குட்பட்ட மற்றும் 18 வயதிற்குட்பட்ட பிரிவுகளில், ஆண்கள் மற்றும் பெண்கள் போட்டிகளில் இடம்பெற உள்ளனர்.

இந்த போட்டி திறமைகளை வெளிப்படுத்தும் தளமாக மட்டுமல்லாமல் பங்கேற்பாளர்களுக்கு இலவச ஸ்போர்ட்ஸ் சயின்ஸ் அஸ்சேஸ்மெண்ட் வழங்கப்படுகிறது. இதனை ஆர்த்தோ ஒன் ஆர்த்தோபெடிக்ஸ்பெஷலிட்டி சென்டரின் அனுபவமுள்ள ஸ்போர்ட்ஸ் மெடிசன் நிபுணர்கள் மற்றும் பிசியோதெரபிஸ்டுகள் மேற்கொள்ள உள்ளனர். போட்டியை தொடர்ந்து பயிற்சி பட்டறை மற்றும் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. அதே போல போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் வெற்றியாளர்கள், இரண்டாம் இடம் பெறுபவர்கள் மற்றும் சிறந்த வீரர்கள் அனைவருக்கும் கோப்பைகள் மற்றும் தனிநபர் விருதுகள் வழங்கப்பட உள்ளது.

78வது அகில இந்திய ஜவுளி மாநாட்டில்

ஜவுளி தொழில் முனைவோருக்கு விருது

கோவை, நவ. 22: இந்திய ஜவுளி சங்கம் (தென்னிந்திய பிரிவு) சார்பில் 78வது அகில இந்திய ஜவுளி மாநாடு கோவை அவிநாசி ரோட்டில் உள்ள தனியார் ஓட்டலில் நேற்று தொடங்கியது. "உலகளாவிய ஜவுளிகள் - வாய்ப்புகளை வெளிப்படுத்துதல்" என்ற கருப்பொருளில் இரண்டு நாட்களுக்கு மாநாடு நடைபெற்றது. அமெரிக்கன் அசோசியேஷன் ஆப் டெக்ஸ்டைல் கெமிஸ்ட்ஸ் அண்ட் கலரிஸ்ட்ஸ் உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில் எல்.எம்.டபிள்யூ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனரான சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, தலைமை விருந்தினராகப் பங்கேற்றார்.

இந்திய ஜவுளி சங்கம் (தென்னிந்திய பிரிவு) தலைவர் சத்யநாராயணா வரவேற்புரை வழங்கினார். இந்திய ஜவுளி சங்கத்தின் தேசியத் தலைவர் டி.எல். படேல், ஜவுளி துறைக்கு இந்த சங்கத்தின் பங்களிப்பு குறித்துப் பேசினார். மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் ராமலிங்கம், இதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இந்த நிகழ்வில் இந்திய ஜவுளி சங்கத்தின் அடுத்த தலைவர் விஜ் பங்கேற்றார். பிரீமியர் மில்ஸ் நிர்வாக இயக்குனர் டாக்டர் சீனிவாசன், சிறப்புரையாற்றினார். அப்போது, ஜவுளி துறையில் மூலப்பொருளில் (பருத்தி) தன்னிறைவு பெற்ற நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.

இருப்பினும், பருத்தி உற்பத்தியில் மகசூல் குறைந்ததால், இந்த சாதக நிலையை இந்தியா மெதுவாக இழந்து வருகிறது என்றார்.

இந்த நிகழ்வில் பள்ளிப்பாளையம் பல்லவா குழுமத்தின் நிர்வாக இயக்குநர் துரை பழனிசாமி மற்றும் தேனி எல்.எஸ். மில்ஸ் லிமிடெட் தலைவர் மணிவண்ணன் ஆகியோருக்கு எல்.எம்.டபிள்யூ தலைவர் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, தொழில்சார் சிறப்பு விருதுகள் வழங்கினார்.

கே.எம். நிட்வேர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கே.எம். சுப்பிரமணியம் மாநாட்டின் மலரை வெளியிட்டார், அதன் முதல் பிரதியை சுலோச்சனா காட்டன் ஸ்பின்னிங் மில்ஸ் நிர்வாக இயக்குனர் கிருஷ்ண குமார் பெற்றுக் கொண்டார். சிட்ரா நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் ராஜ்குமார் தனது உரையில், ஜவுளித்துறைக்கு ஒன்றிய அரசு அளித்த ஆதரவை எடுத்துரைத்தார்.

72-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா

2,808 பேருக்கு ரூ.54.30 கோடியில் நலத்திட்ட உதவி: கலெக்டர் வழங்கினார்

கோவை, நவ. 22: கோவை மாவட்ட அளவிலான தமிழக அரசின் அனைத்திந்திய கூட்டுறவு வார விழா-2025 தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினம் நடந்தது. மாவட்ட கலெக்டர் பவன்குமார் தலைமை தாங்கினார். கோவை தொகுதி எம்.பி., கணபதி ராஜ்குமார், மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில், 2,808 பயனாளிகளுக்கு ரூ.54.30 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் பவன்குமார் வழங்கினார். இதையொட்டி, மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் மற்றும் பல்வேறு போட்டிகள், கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் ஆகியவற்றை மாவட்ட கலெக்டர் பவன்குமார் வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது:மாவட்டத்தில் மொத்தம் 869 கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. மாவட்டத்தில், 27,130 விவசாயிகள் பயன் பெறும் வகையில் ரூ.344.26 கோடி கடன் தொகை தமிழக அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நகைக்கடன் 40,643 பேர் பயன் பெறும் வகையில் ரூ.6 ஆயிரம் கோடி அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத்தொகை 53,568 பயனாளிகளுக்கும், தமிழ்புதல்வன் திட்டத்தின்கீழ் உதவித்தொகை 8,031 மாணவர்களுக்கும், புதுமைபெண் திட்டத்தின்கீழ் உதவித்தொகை 1,154 மாணவிகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. 2024-25 ஆண்டில் பல்வேறு தொழில் துவங்க ரூ.3,921.35 கோடி தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் பவன்குமார் பேசினார். விழாவில், கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர் மற்றும் மேலாண்மை இயக்குனர் சு.ராமகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் அழகிரி, தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, துணை பதிவாளர் கே.ஆனந்தன் மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள், பணியாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தொண்டாமுத்தூர் சித்தி விநாயகர் கோயிலில் நாளை கும்பாபிஷேக விழா

தொண்டாமுத்தூர், நவ.22: கோவை அருகே தொண்டாமுத்தூர் சந்தைப் பேட்டை சித்தி விநாயகர் கோவில் உள்ளது. இங்கு கன்னிமூல கணபதி, தென்முக கடவுள் அண்ணாமலையார், துர்க்கை அம்மன் மற்றும் நாகர் தெய்வங்கள் பீடங்களை மறு திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு, கும்பாபிஷேக விழா இன்று துவங்குகிறது.

இன்று (22 ம் தேதி) காலை 11 மணிக்கு திருவிளக்கு, புனித நீர், ஆனைந்து, மூத்த பிள்ளையார், ஐம்பூதம், நிலத்தேவர், திருமகள், புற்று மண் முளைபாலிகை வழிபாடு தொடர்ந்து காப்புகட்டுதல் நிகழ்ச்சி நடக்கிறது. மாலை 3 மணிக்கு தீர்த்தக்குடம் மற்றும் முளைப்பாலிகை எடுத்து வருதல், மாலை 5 மணிக்கு முதல் கால வேள்வி நடக்கிறது.

இதைத்தொடர்ந்து, நாளை (23 ம் தேதி) காலை 6 மணிக்கு திருப்பள்ளிகளுக்கு எழுச்சி மங்கல இசை இறைத்திருமேனிகளுக்கு காப்புகட்டுதல் தொடர்ந்து 7 மணிக்கு இரண்டாம் கால வேள்வி திருமுறை விண்ணப்பம் பேரொளி வழிபாடு நடக்கிறது. காலை 8 மணிக்கு திருக்குடங்கள் உலா, மும்மூர்த்திகளுக்கு கும்பாபிஷேக விழா நடக்கிறது. பேரூரா தீனம் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் தலைமையில், காரமரத்தூர் ராசாமணி குழுவினர் வேள்விகளை நடத்துகின்றனர். இந்நிகழ்ச்சிகளை தமிழ்ச்செம்மல் கவிஞர் சுப்பு.தர்மன், புலவர் பழனிசாமி ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.

விழாவில் அமைச்சர், எம்.பி., எம்.எல்.ஏ.,க்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து கட்சியினர் கலந்து கொள்கின்றனர். மாலை 3 மணிக்கு குளத்துப்பாளையம் வேலும் மயிலும் கிராமிய கலைக் குழு வள்ளி கும்மி நடைபெறுகிறது.

5 மணிக்கு ஜமாப் நிகழ்ச்சி, இரவு 7 மணிக்கு திரை இசை பாடல்களில் மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியையும் மன நிறைவையும் கொடுப்பது அந்த காலத்து பாடல்களா? இந்த காலத்து பாடல்களா? இன்னிசை பாட்டு பட்டிமன்றம் நடக்கிறது. விழா ஏற்பாடுகளை இந்து சமய அறநிலைத்துறை ஆய்வாளர் பவானி, அறங்காவலர் கண்ணன் மற்றும் விழா குழுவினர் செய்து வருகின்றனர்.

முதல்வரிடம் வாழ்த்து

▶ சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளுடன் 'உடன் பிறப்பே வா, நேருக்கு நேர்' சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினிடம், எட்டிமடை பேரூர் திமுக செயலாளர் ஆனந்தகுமார் வாழ்த்து பெற்றார்.

போர்வெல் லாரி கவிழ்ந்து தொழிலாளி பலி

பாலக்காடு, நவ.22: கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டத்தில் கருவஞ்சால் மலைப்பாதையில் போர்வெல் லாரி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் தொழிலாளி ஒருவர் உடல் நசுங்கி உயிரிழந்தார். தமிழகம் நாமக்கல் பகுதியைச் சேர்ந்த பாலாஜி என்பவருக்கு சொந்தமான போர்வெல் லாரியை ஆலங்காட்டைச் சேர்ந்த ஒருவர் வாடகைக்கு எடுத்த கண்ணூர் மாவட்ட மலையோர கிராமங்களில் ஆழ்க்குழாய் கிணறுகள் அமைத்து வந்துள்ளார். நேற்று முன்தினம் டிரைவர் உட்பட 8பேர் கண்ணூரிலிருந்து கருவஞ்சால் மலைபாதை வழியாக ராவுகுன்று தோட்டு பகுதிக்கு சென்று கொண்டிருந்தனர். அப்போது, மலைப்பாதை இறக்கத்தில் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி, மலைச்சரிவில் கவிழ்ந்து மரத்தில் மோதி நின்றது. இதில், வடமாநில தொழிலாளியான சத்தீஸ்கர் மாநிலத்தை சேர்ந்த நந்தலால் (32) லாரிக்கு அடியில் சிக்கி உடல்நசுங்கி உயிரிழந்தார். லாரி டிரைவர் ஸ்ரீஹரி வாசுதேவன் (26) உட்பட 5 பேர் படுகாயமடைந்தனர்.

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பௌண்டு, வேரவல், குஜராத் – 362266.
கிளை அலுவலகம்: G-கார்ப் டெக் பார்க், 8வுவது தளம், காசர் வடாவளி, கோட்பந்தர் சாலை, தானே, மகாராஷ்டிரா 400601.

கோரிக்கை அறிவிப்பு (கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3(1)–இன்கீழ்)

கடனீட்டுச் சொத்துக்களை நொக்கமாக்குதல் மற்றும் நிதிக் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)–இன் கீழான மாற்று வழிச் சேவை அறிவிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது யாதெனில், ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (ABHFL) நிறுவனம் அவர்களுக்கு வழங்கிய கடன் வசதிகளை அவர்கள் திருப்பிச் செலுத்தத் தவறியதால் அவர்களின் கடன் கணக்குகள் இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல்களின்படி வங்கிப் பேரேடுகளில் செயல்படாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டன. அதன் பின், ABHFL நிறுவனமானது கடனீட்டுச் சொத்துக்களை நொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சர்ஃபாசி சட்டம்), பிரிவு 13(2)–இன் கீழ் மேற்கூறிய கடன்தாரர்களின் கடைசியாகத் தெரிந்த முகவரிகளுக்கு கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி மொத்த நிலுவைத் தொகையை ஒப்பந்த விகிதப்படியான மேல்வட்டி மற்றும் இடைநிகழ் செலவுகள், செலவினங்கள், கட்டணங்கள் முதலானவற்றுடன் சேர்த்துக் அக்கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தபடி திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தது. ஆனால் கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பினைப் பெற்றுக் கொள்ள மறுத்ததால் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 (சர்ஃபாசி விதிகள்), விதி 3–இன்படி அதே அறிவிப்பு இந்த நாளிதழ் வெளியீடு வாயிலாகவும் எங்களால் வழங்கப்படுகிறது.

வ. எண்	கடன்தாரர்/ உப-கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் / உப-ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி & கடன் கணக்கு எண்	செயல்படாச் சொத்து நாள்	கோரிக்கை அறிவிப்பு நாள்	கோரிக்கை அறிவிப்பின்படி நிலுவைத்தொகை / நாளது தேதியன்று
1	1. இளையராஜா திருப்பதி, SF எண் 117/1h, 1g, பட்டா எண் 1859 & 1860, மனை எண் 198 தெற்குப் பாகம் மற்றும் 199 தெற்குப் பாகம், ஆசியன் கல்லூரி அருகில், S V ரெசிடென்ஸி கட்டம் 1, கொண்டயம்பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, 641110. 2. மஞ்சு இளையராஜா, SF எண் 117/1h, 1g, பட்டா எண் 1859 & 1860, மனை எண் 198 தெற்குப் பாகம் மற்றும் 199 தெற்குப் பாகம், ஆசியன் கல்லூரி அருகில், S V ரெசிடென்ஸி கட்டம் 1, கொண்டயம்பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, 641110. 3. இளையராஜா திருப்பதி, 14/3, அரிசி ஆலைத் தெரு, காளப்பட்டி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, 641048. 4. மஞ்சு இளையராஜா, 14/3, அரிசி ஆலைத் தெரு, காளப்பட்டி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, 641048. 5. இளையராஜா திருப்பதி, மேபா. கல்லூரி எஞ்சினியரிங், 20 சக்ரதாரா ஏரோஸ்பேஸ் இடதுபக்கம், காளப்பட்டி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, 641048. கடன் கணக்கு எண்: LNCOI0HE-10230185449, LNCOI0HL-10230185385, LNCOI0HL-10230185386 & LNCOI0HE-10230185448	01.11.2025	19-11-2025	ரூ.37,73,174.52/– (ரூபாய் மூப்பத்தேழு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து நூற்று எழுபத்து நான்கு மற்றும் பைசா ஐம்பத்திரண்டு மட்டும்) மற்றும் செலுத்தப்படாத அசல் நிலுவைத் தொகை (தாமதக் கட்டணங்கள் சேர்த்து) மற்றும் 06.11.2025 தேதி வரையான வட்டி உட்பட.

அசையாச் சொத்து / அடகு வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் விவரம்: அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட சொத்து. அமைவிடம் கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அஞ்சல்குறியீடு: 641110, பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவு மாவட்டம், அன்னூர் வட்டாரம், கொண்டயம்பாளையம் கிராமம். SF எண் 102, ஏக்கர் 7.82, புஞ்சை ஹெக்டேர் 6.13.25–இல் அடங்கியது, SF எண் 104/3, புஞ்சை ஏக்கர் 2.89, SF எண் 105/1, ஏக்கர் 0.56, SF எண் 105/2, ஏக்கர் 0.32, SF எண் 117/1, ஏக்கர் 2.0, மொத்த புஞ்சை ஏக்கர் 11.91.25 கொண்ட நிலம் S.V. ரெசிடென்ஸி கட்டம் 1 என்ற பெயரில் ஒரு குடியிருப்பு லேஅவுட்டாக மேம்படுத்தப்பட்டது, இது கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட அதிகார உறுப்பினர் செயலாளரால் Ma.Va. (C.U.D.K) ஒழுங்குமுறை எண் 46/2017–இன்கீழும், பொது பகரதிகார ஆவண எண் 6570/2023–இன்கீழும் ஒப்புதல்பெற்றது, இதிலடங்கிய மனை எண்கள் 198 & 199, தெற்குப் பக்க பாகம். இதன் எல்லைகள் மற்றும் அளவீடுகள் பின்வருமாறு: மனை எண் 198, தெற்குப் பக்க பாகம்: வடக்கு: மனை எண் 198–இன் வடக்குப் பக்கம், தெற்கு: 25 அடி கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை, கிழக்கு: 23 அடி தெற்கு வடக்கு லேஅவுட் சாலை, மேற்கு: மனை எண் 199. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 25 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் 20 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் 16 அடி, தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் 21 அடி, தென் கிழக்கு மூலை குறுக்கில் 07 அடி. மொத்தப் பரப்பளவு 513 சதுர அடி. மனை எண் 199, தெற்குப் பக்க பாகம்: வடக்கு: மனை எண் 199–இன் வடக்குப் பக்கம், தெற்கு: 25 அடி கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை, கிழக்கு: மனை எண் 198, மேற்கு: மனை எண் 200. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 25 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் 25 அடி. தெற்கு வடக்காகக் கிழக்குப் பக்கம் 21 அடி, தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் 21 அடி. மொத்தப் பரப்பளவு 525 சதுர அடி. இரண்டு மனைகளும் சேர்த்து மொத்தப் பரப்பளவு 1038 சதுர அடி (96.43 சதுர மீட்டர்) அல்லது 2 சென்ட் 167 சதுர அடிக் கொண்ட நிலம் மற்றும் அங்குள்ள கட்டடம் உட்பட. இத்துடன் லேஅவுட் சாலைகள் மற்றும் பொது வழிப்பாதைகள் முதலானவற்றை பயன்படுத்தும் உரிமைகள் சேர்த்து. மேற்படி சொத்தின் SF எண் 117/1h, மனை எண் 198, பட்டா எண் 1860 மற்றும் SF எண் 117/1g, மனை எண் 199, பட்டா எண் 1859. இந்தச் சொத்து கொண்டயம்பாளையம் கிராம ஊராட்சிக்கு உட்பட்டது

இதன் மூலம் மேற்கூறிய கடன்தாரருக்குத் தெரிவித்துக் கொள்வது யாதெனில், இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் தொகையை மேல்வட்டி மற்றும் செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் முதலானவற்றுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும். தவறினால், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ள எங்களுக்கு உரிமை உண்டு. கவனதீன நடவடிக்கை மட்டுமின்றி விற்பனை நடவடிக்கையும் இதில் அடங்கும். இதன் செலவினம், விளைவுகள் மற்றும் பொறுப்பும் உங்களையே சாரும். சர்ஃபாசி சட்டம், பிரிவு 13(13)–இன்படி, மேற்கூறிய கடனீட்டுச் சொத்துக்களை வங்கிக்கு எழுத்துப்பூர்வமாக முன்கூட்டி அறிவிக்காமல் விற்பனை, குத்தகை அல்லது பிற வகைகளில் கைமாற்றம் செய்ய நீங்கள் அனுமதும் தடை செய்யப்படுகிறீர்கள். மேற்படி பிரிவை நீங்கள் எவ்வகையிலேனும் மீறினால் சர்ஃபாசி சட்டம், பிரிவு 29–இன் கீழான சட்டம் மற்றும் / அல்லது இது தொடர்பான இன்ன பிற சட்டங்களின் கீழ் தண்டனை பெற நேரிடும் என்பதைக் கவனத்தில் கொள்க. மேலும், மேற்படி சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)–இன்படி, ABHFL–இன் நிலுவைகள் ABHFL–ஆல் சேர்த்துள்ள அனைத்துச் செலவினங்கள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் விற்பனை அல்லது கைமாற்றத்துக்குக் குறிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் எந்த நேரத்தில் ABHFL–க்குச் செலுத்தப்பட்டு விட்டாலும் கடனீட்டுச் சொத்தானது ABHFL–ஆல் விற்பனை அல்லது கைமாற்றம் செய்யப்பட மாட்டாது என்பதோடு அந்தக் கடனீட்டுச் சொத்தைக் கைமாற்ற அல்லது விற்க ABHFL மேற்கொண்டு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாது என்பதையும் கவனத்தில் கொள்க.

தேதி: 22.11.2025
இடம்: கோயம்புத்தூர்

ஒ/ம்– அதிகாரப்பூர்வ அலுவலர்
(ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்)

GRIHUM

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா–411014. கிளை அலுவலகம் அலகு: எண்.1510, 2 ஆவது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641018

மின்–ஏலம்– விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவனதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப